27th November 1970]

Works Manager, Boat Building Yard, Nagapattinam

*9. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether any representation has been made by the Tamil Nadu Non-Gazetted Officers Union to the Government regarding the misbehaviour of the Works Manager, Boat Building Yard, Nagapattinam during the month of January, 1970 ; and

(*b*) if so, the details and the action taken thereon ?

நாகப்பட்டினம் படகு கட்டும் நிலைய வேலை மேலாளர்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நாகப்பட்டினம் படகு கட்டும் நிலைய வேலை மேலாளரின் (Works Manager) தவறான நடத்தை குறித்து, தமிழ் நாடு அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் அனுப்பியதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள், அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) நாகப்பட்டினம், படகுகட்டும் துறை பணிமேலாளர் ஒருவர் பணியாளர்களைக் கொடுமைப்படுத்துவதாக 1970 மார்ச் திங்களில் தமிழ்நாடு அரசிதழ்பதிவிலா அரசு அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அரசிடம் முறையிட்டார். துணை மீன்துறை இயக்குனர் (சென்னை மண்டலம்) விசாரணை நடத்தியதில் பணிமேலாளர் அம்மாதிரி யாரையும் தாக்கவில்லை என்று கூறியுள்ளார். கருத்து வேறுபாடு இருப்பதனால் சுமுகமான உறவுநிலை நீடிக்க பணிமேலாளர் இடம் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த நிலையத்தில் இருக்கிற அநேகமாக அவ்வளவு ஊழியர்களும் அந்த மேலாளர் மீது புகார் செய்திருக்கிறார்கள். கொடுமைப்படுத்துகிறார் என்றால், சாதாரணமாகக் கூட அல்ல. அந்த மேலாளர் செருப்பால் அடித்ததாகக்கூட அவர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு அவர் ஊழியர்களை கொடுமைப்படுத்துகிறார் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர் மீது விசாரணை செய்து இப்போது அவர் மீது புகார் ஏதும் இல்லை என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் அவர்மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கான வழி முறை இருக்கிறதா என்று அரசு கவனித்து அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[27th November 1970

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : இந்தப் புகார் சம்பந்தமாக சென்னையிலிருந்து டெபுடி டைரக்டர் அவர்களை அனுப்பி நான் விசாரணை செய்ததில், ஏற்கெனவே குற்றம் சாட்டப்பட்டதைப் போன்று தாக்குதல் எதுவும் நடக்கவில்லை என்று தெரியவந்தது. ஆனால் ஏற்கெனவே இராதாகிருஷ்ணன் என்ற கிளார்க்குக்கும் இந்த மேனேஜருக்கும் தகராறு இருந்தது. அங்கே சுமுகமான சூழ்நிலை இருக்க வேண்டும் என்று அந்த இரண்டு பேருமே அங்கே வேலை செய்ய வேண்டாம் என்று இருவரும் அங்கேயிருந்து மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சில பணியாளர்கள் அந்த மேலாளர் மீது கம்பிளேண்ட் கொடுத்தது உண்மை. ஆனால் டைரெக்டர் விசாரணையின் பிறகு, அடித்ததாகச் சொல்லப்படுவது தவறு என்று தெரியவந்தது. பணியாளர்கள் மட்டுமின்றி அந்த மேலாளரும் அங்கேயிருந்து மாற்றப்பட்டிருக்கிறார்.

Crocodile Farm

*10. *Q.*—Thiru G. SWAMINATHAN, Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether there is any proposal for the setting up of a Crocodile farm in Killukudi village near Srirangam ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the details of the scheme ?

முதலைப் பண்ணை

திரு. ஜி. சுவாமிநாதன், திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஸ்ரீரங்கம் அருகில் கில்லக்குடி கிராமத்தில் முதலைப் பண்ணை ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அத்திட்டத்தின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) யும் (உ)வும் : முதலைகள், அவற்றின் தோல்களுக்காக அநியாயமாகக் கொல்லப்படுவதினின்றும் காப்பதற்காக, ரூபாய் 13 ஆயிரம் செலவில், திருச்சி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீரங்கம் தீவில், கொள்ளிடத்தின் பக்கம் இருக்கும் கிளிக்கூடு என்னும் கிராமத்திலுள்ள குளத்தில் முதலைப் பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசு சமீபத்தில் ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் செலவுத் தொகையில், ஆராய்ச்சி வேலைகள், குளத்திற்கு அபிவிருத்திகள் செய்தல், குளத்தில் முதலைகளை வளர்ப்பதற்கு சொந்தக்காரர்களுக்கு உதவித் தொகை அளித்தல், முதலைகளுக்கு உணவு, பண்ணை வேலை ஆட்கள் மூவரின் சம்பளம், முதலிய இனங்கள் அடங்கும். இத்திட்டம் முதலில் ஓர் ஆண்டு செயல்படுத்தப்படும்.